# கைந்நிலை மருதத்திணை பாடல்களில் குறியீடு

**ஆ.இராஜகுமாரி**
உதவிப் பேராசியர்
தமிழ்த்துறை
அதியமான் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
ஊற்றங்கரை

**மலர்:** 3
**இதழ்:** 3
**தொகுதி:** I
**மாதம்:** ஜனவரி
**வருடம்:** 2019
**ISSN:** 2454-3993

**முன்னுரை**

சங்கம் மருவியகாலத்தில் இயற்றப்பட்ட நூல்களின் தொகுப்பே பதினெண்கீழ்கணக்கு நூலாகும். கணக்கு என்பது ஒரு நூலைக் குறிக்கும் சொல். திருக்குறள், நாலடியார், நான்மணிக்கடிகையெனத் தொடங்கிக் கைந்நிலை வரையிலான பதினெட்டு நூல்களின் தொகுதியைச் சுட்டுதலின், இது பதினெண்கீழ்கணக்கு எனப்பட்டது. இக்கீழ்கணக்கு நூல்களுள் அறம் சார்ந்த பதினோரு நூல்களும், அகப்பொருள்சார்ந்த ஆறு நூல்களும், புறம்சார்ந்த ஒரு நூலும் இடம் பெறுகின்றன. அகப்பொருள் நூல்களில் ஒன்றான கைந்நிலை புல்லங்காடனார் என்னும் புலவரால் பாடப்பட்டது. கை என்பது ஒழுக்கம் ஆகும். ஒழுக்கநிலையினை எடுத்தியம்புவதால் கைந்நிலை எனப்பட்டது. இந்நூல் அறுபது வெண்பாக்களைக்கொண்டது. இந்நூலில் மருதத்திணைப் பாடல்களின்வழி குறிப்பால் பொருளுணர்த்தும் உத்திமுறையை விளக்கமாக ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**குறியீட்டியல் (Symbolism)**

குறியீடு என்பது அடையாளம் (Sign) என்பதாகும். பழங்காலத்தில் ஆநிரைகவர்தல் என்பது வெட்சிக்கு அடையாளமாக வெட்சிப்பூச் சூட்டப்பட்டது. வெற்றி என்பதற்கு வாகைப்பூ அடையாளமாக நிற்கிறது. அடையாளமாக அமைகின்ற ஒன்று அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டுச் சமுதாயத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்படுமானால் அவ்வடையாளம் நாளடைவில் குறியீடு என்ற நிலையை அடைகிறது. இக்குறியீடு என்ற சொல்லாட்சி 1960-களில்தான் கலைச்சொல்லாகப் பரிணாமம் பெற்றுள்ளது. 'குறியீடு' என்ற சொல்லை இன்று வழங்கும் இலக்கியப் பொருண்மையில், உத்தியைக் குறிக்கும் கலைச்சொல்லாக அறிமுகப்படுத்தியவர் புகழ்பெற்ற படைப்பிலக்கியவாதியும் இலக்கியத் திறனாய்வாளருமான சி.சு செல்லப்பா ஆவார். குறியீடு என்பதை நம் முன்னோர்கள் இனங்கண்டு அதற்கு பெயரிட்டு விளக்கவில்லை. ஆயினும் தமிழ்க்கவிஞர்கள் இவ்வுத்தியைப் பயன்படுத்தி இருப்பதைக் காணமுடிகிறது.

சங்க அகப்பாடல்கள் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைப் பாகுபாட்டில் பாடப்பட்டுள்ளன. இவற்றில் உள்ளுறை உவமத்தில் குறியீடுகள் சுட்டப்பட்டுள்ளது. சான்றாக, உழவர் இடையேயும் குறவர் இடையேயும் அறிமுகமான பொருள்கள், சொல்வழக்கு இவற்றையே இவர்கள் தம்சொற்களில் பயன்படுத்துவது குறியீடு ஆகும். இவை பாடல்களில் சிறப்பாகப் பாத்திரக்கூற்றாகவே வெளிப்பட்டுள்ளன.

**சங்கப்பாடல்களில் குறியீடு**

குறியீடுகளுக்கும் அவை குறிக்கும் சொற்களுக்கும் இடையே ஒற்றுமை காணப்படுவதுண்டு. சங்கஇலக்கியத்தில் ஆலங்குடி வங்கனார் இயற்றிய மருதத்திணைப் பாடல் இவ்விரு விளக்க முற்படுகின்றது.

**"கழனி மாஅத்து விளைந்துஉகு தீம்பழம்**
**பழன வாளை கதூஉம் ஊரன்" (குறுந். 8: 1-2)**

வயல் அருகில் உள்ள மாமரத்திலிருந்து முற்றிவீழ்ந்த இனியபழத்தைப் பொய்கையிலுள்ள வாளைமீன்கள், கவ்வி உண்பதற்கு இடனாகிய மருதநிலத் தலைமகன் என்பது பொருளாகும். இதில்,

மாம்பழம் - தலைவனுக்கும்
மாமரம் - தலைவிக்கும்
வாளைமீன் - பரத்தைக்கும்

உவமைப்படுத்தப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது. மேலும் மற்றொரு மருதத்திணைப் பாடலில், தலைவிக்கூற்றில் உள்ளுரையில் குறியீடுகள் காணப்படுகின்றன.

**"அள்ளல் ஆயெ புள்ளிக் கள்வன்**
**முள்ளிவேர் அளைச் செல்லும் ஊரன்" (ஐங்குறு. 22:1-2)**

என்ற இவ்வரிகள் தன் உடல் முழுவதும் சேற்றைப் பூசிக்கொண்ட நண்டு அதனைச் சிறிதும் கருதாது, அச்சேற்றுடனேயே தன் வளையின்கண் சென்று உறையும் ஊரன் என்பது பொருள். தகுதிப்பாடு மிகுதியும்கொண்ட தலைவன் தன் தீயொழுக்கம்பற்றி ஊரவர் சொல்லும் பழிச்சொல் பற்றிச் சிறிதும் கவலைகொள்ளாது, பரத்தையர் மனைக்குச் செல்கின்றான் என்ற இக்கருத்து உள்ளுறைப் பொருளைக்கொண்டுள்ளது என்பதை அறியமுடிகின்றது.

நண்டு - தலைவன்
சேறு - பரத்தை
சேற்றைப் பூசிக்கொள்ளுதல் - தலைவன் பரத்தை மனைக்குச் செல்லுதல்

மேற்கண்ட சங்க இலக்கியப் பாடல்களில் மாம்பழம், நண்டு, தலைவனாகவும், வாளை மீன், சேறு, பரத்தைக்கும் அடையாளமாகக் குறிக்கப்படுகின்றன.

**கைந்நிலை மருதப்பாடல்களில் உவமை**

**"கழனி உழவர் கலி அஞ்சி ஓடித்**
**தழென மத எருமை தண்கயம் பாயும்**
**பழன வயலூரன் பாண எம்முன்னர்ப்**
**போழெனப்பொய் கூறா தொழி" (கைந்நிலை 37:1-4)**

இப்பாடலில் வயலில் உழுகின்ற உழவர் செய்யும் ஆரவாரத்தைக்கேட்டு அஞ்சி விரைவாய்ப் போய்ச் செருக்கும் கொண்ட எருமைகள் தாழென ஒலி உண்டாகுமாறு குளிர்ந்த நீர்நிலையில் விழும் இயல்பை உடைய மருத நிலங்களையும் வயல்களையும்கொண்ட தலைவன் அனுப்பிய பாணனே, எம்முன்பு நீ போழெ என்ற ஒலியுடன் பொய்சொல்வதைக் கைவிடுவாய் எனத் தலைவி உரைத்தாள். இதில்

எருமை மாடு - தலைவன்
உழவர் - தலைவி
நீர்நிலை - பரத்தையிடம் செல்லுதல்

என்று உவமைப்படுத்தப்படுகிறது. அவ்வாறே

**"முட்டமுதுநீர் அடைகரை மேய்ந்தெழுந்து**
**தொட்ட வரிவரால் பாயும் புனல் ஊரன்" (கைந்நிலை.39: 1-2)**

என்ற பாடலில் பதிக்கப்பட்டவை போன்ற வரிகளையுடைய வரால் மீன்கள் பழமையான நீர் மோதும் கரை முழுவதும் திரிந்து இறைகளை உண்டு பின்பு எழுந்து நீருக்குள் பாயும் மருத நிலம் என்பது பொருள்.

வரால் - தலைவன்
மீன் மற்றும் நீர் - பரத்தை
மீன் நீருக்குள் உலவுதல் - பரத்தை வீட்டுக்குள் தலைவன் உலவுதல்

வரால்மீன், சிறுமீன், தவளை முதலியவற்றை உண்டு பின்பு நீருக்குள் பாய்ந்தது. அதுபோல் தலைவன் பரத்தையர்சேரி முழுவதும் திரிந்து பரத்தையர் இன்பத்தை அனுபவித்து தம் மனைக்குத் திரும்பி வந்தான் என்பது உவமையாகும். மேலும்,

**"போதவிழ் தாமரைப் பூந்துறை ஊரனைத்**
**தாதவிழ் கோதைத் தகையிலார் தாம்புலப்பர்" (கைந்நிலை 43: 1-2)**

இப்பாடலில் அரும்புகள் மலர்வதைப்போல் பரத்தையர் சேரியில் பலமங்கையரும் பூப்பெய்துகின்றனர். வண்டுகள் புதிய பரத்தையரையே விரும்பும். இந்தப் பொருள் விளங்கப் போதவிழ் தாமரை பூந்துறை என்று உரைக்கப்பட்டது. பிறமகளிர் என்று தலைவி தன்னையே கூறிக்கொண்டாள் அவ்வாறு நோக்கும்போது,

வண்டு - தலைவன்
அரும்பு மலர்கள் - பரத்தையர்
பிறமகளிர் - தலைவி

என்று குறியீட்டால் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும்

**"கயலினம் பாயும் கழனி நல்லூர**
**நயமிலேம் எம்மனை இன்றொடு வாரால்**
**துயிலின் இளமுலையார் தோள் நயந்து" (கைந்நிலை 38: 1-3)**

இப்பாடலில் கயல்மீன்கள் துள்ளிப்பாய்கின்ற வயல்களைக்கொண்ட மருதநிலத் தலைவனே யாம் ஆடல், பாடல் முதலிய நலம் இல்லாதவர். ஆதலால் நீ பரத்தையர் இல்லத்திலேயே இன்பம் அனுபவித்து விட்டு வா என்பதாகப் பொருள் அமைகிறது. இவற்றில்

மீன் - தலைவன்
வயல் வெள்ளம் - பரத்தை மற்றும் பரத்தையர் இல்லம்
வயல் வெள்ளத்தில் மீன் திரிதல் - பரத்தையர் வீட்டில் தலைவன் திரிதல்

என்று உவமை வெளிப்பட்டுள்ளதை அறியமுடிகிறது. மேலும் கீழ்வரும் பாடலில்

**"தாரா விரியும் தகைவயல் ஊரனை**
**வாரான் எனினும் வரும் என்று – சேரி**
**புலப்படும் சொல்லும் இப் பூங்கொடி அன்னார்" (கைந்நிலை 40:1-3)**

தாரா என்ற பறவைகள் பரந்து செல்கின்ற அழகுடைய வயல்களுக்குப் போய் அங்குள்ளவற்றை உண்ணும் அத்தகைய இயல்புடைய மருதநிலத் தலைவன் என்பது இதன் உட்பொருள். பரத்தையர் வீடுதோறும் போய்த் தங்கி இன்பம் துய்த்து வருகின்றவன் தலைவன் என்பதாகும். இங்கு,

தாராபறவை - தலைவன்
வயல் - பரத்தை
தாரா பறவை வயலில்
உள்ளதை உண்ணுதல் - தலைவன் பரத்தை வீடுதோறும் போய் தங்கி இன்பம் துய்த்தல்

என உவமித்துச் சுட்டப்படுகிறது.

### கைந்நிலை மருதத்திணையில் குறியீடு

குறியீடு என்பது ஒருவகையான அடையாளம் எனக் கருத்தில்கொண்டு பார்க்கும்போது, தலைவன், தலைவி, பரத்தை போன்ற பாத்திரங்களுக்கான குறியீடாகச் சிலவற்றை அறியலாம்.

### தலைவனுக்கான குறியீடுகள்

எருமைமாடு (கைந்நிலை 37), மீன் (கைந்நிலை 38), வரால் மீன் (கைந்நிலை 39), தாரா பறவை (கைந்நிலை 40), வண்டு (கைந்நிலை 43).

### தலைவிக்கான குறியீடுகள்

உழவரின் ஒலி (கைந்நிலை37), பிற மகளிர் (கைந்நிலை43), மாமரம் (குறுந்தொகை8).

**பரத்தமைக்கான குறியீடுகள்**

நீர்நிலை (கைந்நிலை 37), வயல்வெள்ளம் (கைந்நிலை 38), நீர் மோதும் கரை (கைந்நிலை 39), அரும்பு மலர் (கைந்நிலை 43), வயல் (கைந்நிலை 40), சேறு (ஐங்குநுறூறு 22), வாளை மீன் (குறுந்தொகை 8). இதுகாறும் விளக்கப்பட்டதிலிருந்து சங்க இலக்கியங்களிலும், கைந்நிலை மருதத்திணைப் பாடல்களிலும் குறியீடுகள் பொதுதன்மையோடு இருப்பதை அறியமுடிகிறது.

**முடிவுரை**

மருத நிலத்தில் தலைவனுக்கும், பரத்தைக்கும் மட்டுமே உவமைக் குறியீட்டு அடையாளங்கள் அதிகம் காணப்படுகின்றன. தலைவி குறித்த குறியீட்டு அடையாளங்கள் கைந்நிலையில் பெரிதும் குறிப்பிடப்படவில்லை. அவற்றுடன் பரத்தமைக்குரிய குறியீட்டு அடையாளங்களாக வயலும் வயல் சார்ந்த நீர் நிலைகள், பூக்கள் போன்றவை பெரிதும் குறியீடுகளாக உள்ளன. தலைவனுக்கு வண்டு, பறவைப் போன்ற உயிரினங்கள் அடையாளங்களாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

**துணை நின்ற நூல்கள்**

1. கௌமாரீஸ்வரி. எஸ்.,(உ.ஆ), பதினெண்கீழ்க்கணக்கு நூல்கள் மூலமும், உரையும், சாரதா பதிப்பகம், 2009.
2. சிற்பி பாலசுப்பிரமணியம் (முதலானோர்), ஆய்வுக்கோவை 2004 (பல்துறையியல்) (பதிப்பாசிரியர்), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், தமிழாய்வுத்துறை, திருச்சி, 2004.
3. நாகராசன். வி., (உ.ஆ), குறுந்தொகை (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் அச்சு, ஐந்தாம் பதிப்பு 2014.
4. தட்சிணாமூர்த்தி. அ., (உ.ஆ), ஐங்குறுநூறு (மூலமும் உரையும்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மூன்றாம் அச்சு, ஐந்தாம் பதிப்பு 2014.